DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 283 of 2024 |
| Deposition of witness for | : | PW9 |
| Name | : | செல்வராஜ் |
| Father's Name | : | R. MUNUSAMY |
| Village | : | HOSUR HUDCO |
| Taluk | : | HOSUR |
| District | : | KRISHNAGIRI |
| Profession | : | SI OF POLICE |
| Age | : | 60/26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 12th day of February 2026.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது ஒசூர் அட்கோ காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 15.03.2021 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு மகாராஜா கடை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, இந்து, வயது 29, க/பெ.வேலு, ஆம்பள்ளி கிராமம், பர்கூர் தாலுகா, கிருஷ்ணகிரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப மகாராஜா கடை காவல் நிலைய குற்ற எண்.32/2021 சட்டப்பிரிவு 279, 337, 304(A) இதசவின் படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் உண்மை நகலை கனம் கிருஷ்ணகிரி, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.II அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். காவல் ஆய்வாளர் அவர்கள் வேறு அலுவலில் இருந்த படியால் உயர் அதிகாரிகளின் உத்தரவின் படி இவ்வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு பகல் 12.30 மணிக்கு சம்பவ இடமான குப்பம் – கிருஷ்ணகிரி ரோட்டில் ராயல் காலேஜ் எதிரில் சம்பவ இடத்திற்கு சென்று அங்கிருந்த சாட்சிகள் பிரசாந்த், முருகன்

என்பவர்களிடம் விபத்திற்கான இடத்தை கேட்டதில் அவர்கள் அடையாளம் காட்டிய இடத்தை மாதிரி வரைபடம் வரைந்தும், பார்வை மகசர் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு மதியம் 02.00 மணிக்கு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று சவக்கிடங்கில் இருந்த இறந்துபோன வேலு, வயது 39, த/பெ.முருகன், ஆம்பள்ளி கிராமம் என்பவர் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பஞ்சாயத்தார்கள் கிருஷ்ணன், சந்திரமோகன், ராஜேஷ், அர்ஜீனன், சிவா மற்றும் சாட்சிகள் இந்து, குமார், வீரமணி, அண்ணாமலை, வெங்கடேசன் ஆகியோர்களுக்கு சம்மன் சார்பு செய்து வரவழைத்து பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டேன். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத விசாரணை முடித்து மாலை 04.05 மணிக்கு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக வேண்டி இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு மகாராஜா கடை காவல் நிலைய தலைமைக் காவலர் 829 மகேந்திரன் என்பவரிடம் பிரேதத்தை ஒப்புவித்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

புகார்தாரர் இந்து என்பவர் எத்தனை நாள் கழித்து புகார் கொடுத்தார் என்றால் 15.03.2022 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு புகார் கொடுத்தார். புகாரை எழுத்துமூலமாக எழுதிக் கொடுத்தார். புகாரில் தகவல் தெரிந்து வந்து தான் புகார் கொடுத்ததாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். புகார்தாரருக்கு நேரடியாக விபத்து பற்றி தெரியாது என்றால் சரிதான். வழக்கு பதிவு செய்த அரை மணி நேரத்தில் முதல் தகவல் அறிக்கையை தலைமைக் காவலர் ராஜா என்பவரிடம் கொடுத்து விட்டேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையில் 2 நாட்கள் காலதாமதமாக வந்துள்ளது என்றால் அது நீதிமன்றத்திற்கு வரும் தலைமைக் காவலருக்கு தான் தெரியும். காலதாமதத்திற்கான காரணம் முதல் தகவல் அறிக்கையில் 8வது காலத்தில் குறிப்பிடவில்லை என்றால் இதில் காலதாமதம் எதுவும் ஏற்படவில்லை. 12.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன். மாதிரி வரைபடம் விபத்து ஏற்பட்டதன் அடிப்படையில் பார்வை மகசர் சாட்சிகள் அடையாளம் காட்டியதன் அடிப்படையில் வரைந்தேன். பார்வை மகசரில் சம்பவ இடத்திலிருந்து வடகிழக்கு 110 அடி தொலைவிலும் கண்ணன் சீட்டு வீடு அமைந்துள்ளது

என்றும் சம்பவ இடத்திற்கு கிழக்கு 95 அடி தொலைவில் முத்து என்பவரது செங்கல் சூலை அமைந்துள்ளது என்றும் சம்பவ இடத்திற்கு தென்மேற்கு ராயல் காலேஜ் செல்லும் மண்ரோடு சுமார் 185 அடி தொலைவில் அமைந்துள்ளது என்றும் தென்மேற்கில் கேஆர்கே பாபு என்பவரின் விவசாய நிலம் அமைந்துள்ளது என்றும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகள் தோராயமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பார்வை மகசர் சாட்சிகளையும், மருத்துவமனையில் விசாரித்ததாக சொல்லப்படும் சாட்சிகளையும் காவல் நிலையத்திலேயே வைத்து தயார் செய்து காவல் நிலையத்திலேயே கையொப்பம் பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன வேலு என்பவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் இல்லாமல் அவரின் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 283 of 2024 |
| Deposition of witness for | : | PW10 |
| Name | : | கணேஷ் குமார் |
| Father's Name | : | முனுசாமி |
| Village | : | தேன்கனிக்கோட்டை |
| Taluk | : | தேன்கனிக்கோட்டை |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | Inspector of Police |
| Age | : | 52 years |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 12th day of February 2026.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது தேன்கனிக்கோட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.03.2021 ஆம் தேதி மகாராஜா கடை காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது, மகாராஜா கடை காவல் நிலைய குற்ற எண்.32/2021, சட்டப்பிரிவு 279, 337, 304(A) IPC வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றே இவ்வழக்கின் எதிரியான வாசுதேவலு என்பவரை காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து அன்றே நிலைய பிணையில் விடுவித்தேன். மேலும் வழக்கில் ஈடுபட்ட வாகனங்களான AP 39 TC 9913 என்ற பதிவு எண் கொண்ட பேருந்து மற்றொன்று வாகனமான TN 24 K 9719 Bajaj pulsar வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு ஆய்வு செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். அதன்பின்னிட்டு நான் பணியிட மாறுதலில் சென்றதால் காவல் ஆய்வாளர் முத்தமிழ்செல்வ ராசன் என்பவரிடம் வழக்கு கோப்பை ஒப்புவித்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

மோட்டார் வாகன ஆய்விற்கு வாகனங்களை நான் தான் அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வாகனங்களை

ஆய்வு மேற்கொள்ள ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சம்பவ இடமானது தேசிய நெடுஞ்சாலை என்பதால் மேலும் விபத்து ஏற்படுவதை தவிர்ப்பதற்காக வாகனங்களை புகைப்படம் எடுத்து விட்டு அப்புறப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்திலேயே வாகனங்களின் ஆய்வு மேற்கொண்டிருந்தால் வழக்கின் உண்மைத்தன்மை தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. எதிரி ஓட்டி வந்த AP 39 TC 9913 என்ற பதிவு எண் கொண்ட பேருந்தை 8 மாதம் காலதாமதமாகத்தான் ஆய்விற்கு அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான், எதிரி ஆவணங்கள் கொடுக்காததால் காலதாமதம் ஏற்பட்டது. பேருந்தை ஓட்டிச் சென்ற எதிரிக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் இருக்கிறது. இறந்துபோன வேலு ஓட்டிச் சென்ற TN 24 K 9719 Bajaj pulsar வாகனத்தை 6 மாதம் காலதாமதமாகத் தான் ஆய்விற்கு அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். இறந்துபோன வேலு ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு காப்பீடு, ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி ஓட்டிச் சென்ற பேருந்திற்கும் காப்பீடு தாக்கல் செய்யப்படவில்லை. காவல் நிலையத்தில் 6 மாதங்கள் – 8 மாதங்கள் வைத்திருந்ததால் காவல் நிலையத்தில் வாகனங்கள் ஒன்றோடொன்று மோதியதால் சேதாரம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. காலதாமதமாக வாகனங்களை ஆய்விற்கு அனுப்பியதால் அதில் சொல்லப்பட்டுள்ள சேதாரங்கள் ஏற்புடையதாக இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.